# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1036**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**149**

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

# 'தமிழால் முடியும்' – வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி!

## உலகுக்கு உரத்துச் சொல்லும் தமிழ்நாடு!

மாணவர்களுக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள், கல்வி வழிகாட்டி நிகழ்ச்சிகள் உயரிய நோக்கம் கொண்டவை. ஆனால், அந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னால், பொருளீட்டும் நோக்கங்களும் நிகழ்ச்சிகளை நடத்து பவர்களுக்குப் பின்னால், சில அரசியல் நோக்கங்களும் உள்ளன. ஆனால், இந்த நோக்கங்கள் எதுவும் இல்லாமல், தமிழ் மற்றும் தமிழ் வழியில் பயிலும் அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு 'தமிழால் முடியும்' என வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சிகளை அளித்து வருகிறது தமிழ்நாடு அரசு.

மாணவர்கள் எதிர்காலத்தில் எந்த அரசியல் கருத்தையும் விரும்பலாம். ஆனால், அவர்களுக் கான வாய்ப்புகளை உருவாக்குவதையும், வழிகாட்டல் பயிற்சிகளையும் அரசியல் விருப்பு வெறுப்பின்றி செய்து கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு. அதன் ஓர் சான்றுதான் மாணவர்களுக்கு 'தமிழால் முடியும் - வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி.

தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களை தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்காகத் 'தமிழால் முடியும்' என்கிற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சியை 2022-ஆம் ஆண்டு முதல் கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தி வருகிறது தமிழ் வளர்ச்சித் துறை.

குறிப்பாக, தமிழ்நாட்டின் 38 மாவட்டங் களிலும், தமிழிலக்கியத்தில் இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு பயிலும் 200 கல்லூரி மாணவ மாணவிகள், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயன்பெற்று வருகின்றனர்.

### 2022-ஆம் ஆண்டு முதல்...

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ஆம் தேதி தொடங்கி, 29-ஆம் தேதி வரை மூன்று நாள்கள் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

2024-ஆம் ஆண்டு ஜூலை மாதம், சென்னை உலகத் தமிழாய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற 'தமிழால் முடியும் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி' நிகழ்ச்சியை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

30.7.2024 முதல் 1.08.2024 வரை மூன்று நாள்கள் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்மொழி சார்ந்த பயன்பாடுகள், அதில் சாதித்தவர்கள் வழிகாட்டும் பயிற்சிகளை அளித்தனர்.

2025-ஆம் ஆண்டுக்கான முதல் நிகழ்ச்சியாக, கள்ளக்குறிச்சி மாவட்டம் இந்திலி டாக்டர் ஆர்.கே.சண்முகம் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. மார்ச் 26-ஆம் தேதி தொடங்கி, 28-ஆம் தேதி வரை 3 நாள்கள் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதில் இருந்தும் தேர்வு செய்யப்பட்ட 200 மாணவ, மாணவிகள் வருகை தந்தனர்.

நான்காவது ஆண்டு நிகழ்வாக அக்டோபர் 7-ஆம் தேதி தொடங்கி 9-ஆம் தேதி வரை, மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரி யில் நடைபெற்றது.



மூன்று நாள் பயிற்சி முகாம்களில் தமிழில் மருத்துவம், பண்பலை தொகுப்புக்கலை, தமிழால் வேலைவாய்ப்பு, இதழியலில் தமிழ், புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழியின் தேவையும் வேலை வாய்ப்புகளும், வெள்ளித்திரையில் தமிழ், இயந்திர மொழிபெயர்ப்பு ஊடகங்களில் தமிழ், போட்டித் தேர்வுகளுக்கு தமிழ், தமிழும் மொழிபெயர்ப்பும் எனப் பல தலைப்புகளில் உரை நிகழ்த்தப் பட்டன. அந்தந்தத் துறைகளில் ஆளுமையாகத் திகழ்பவர்கள் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

### தங்கும் இடம் – செலவுகள்

எழுத்து, பேச்சு, படைப்பாளுமை போன்ற வற்றில் ஆர்வம் உடைய மாணவ, மாணவிகளில் மாவட்டத்துக்கு 6 பேர் வீதம் தேர்வு செய்யப்பட்டு அழைத்து வரப்படுகின்றனர்.

மாணவர்களுக்கு மூன்று நாள்களும் தங்கும் வசதி, உணவு, போக்குவரத்துச் செலவுகள், பயிற்சிக்கான கையேடு, பயிற்சி பெற்ற சான்றிதழ், புத்தகங்கள் என அனைத்தும் வழங்கப்படு கின்றன. மாணவர்கள் சொந்த ஊரிலிருந்து புறப்படுவது தொடங்கி, அவர்கள் வீட்டுக்குச் செல்வது வரை உரிய கவனத் துடன் அனைத்தையும் தமிழ் வளர்ச்சித் துறை அதிகாரிகள் ஒருங்கிணைக்கின்றனர்.

தமிழ் மற்றும் தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களிடத்தில் தமிழ் ஆர்வத்தை உருவாக்குவது மட்டுமல்ல; தமிழ் கற்பதன் மூலம் அவர் களுக்கான வாய்ப்புகளைப் புரிந்துகொண்டு, தன்னம்பிக்கை பெறுவதற்கும் இந்தப் பயிற்சி வகுப்பு உறுதுணையாக உள்ளது.

தமிழ் படித்தால் தமிழ்நாட்டில் மட்டும்தான் இருப்போம் என்று சில எதிர் அரசியல் சக்திகள் மாணவர்களைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில், தமிழ் மட்டுமல்ல; தமிழ் வழியில் படித்தால் உலக அளவிலான வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன என்பதை மாணவர்கள் உணர்ந்துகொள்ள, அந்த மாணவர்கள் உலகை வெல்ல தமிழால் முடியும் என்று உரத்துச் சொல்கிறது, திராவிட மாடல் அரசு.





தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழர் பண்பாடு ஆகியவை குறித்தும் உலகளாவிய அளவில் தமிழ் வளர்ச்சி குறித்தும் பல்வேறு அறிஞர்கள், படைப்பாளிகள், சிந்தனையாளர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சியின் தலைப்புகளைத் தெரிந்துகொள்ளவும், அவை பற்றிய அறிவைப் பெறவும் என் இளமைக் காலத்தில் எனக்குச் சில ஆண்டுகள் ஆகின. ஆனால், இந்தக் கல்லூரி மாணவர்களுக்கு அவற்றைப் பற்றிய அறிமுகத்தை மூன்று நாள் முகாமிலேயே கிடைக்கச் செய்துள்ள தமிழ் வளர்ச்சித் துறையின் இந்தத் திட்டத்துக்காகத் தமிழ்நாட்டு அரசை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

– பிருந்தாசாரதி, திரைப்பட இயக்குநர்.



> **தமிழ் கற்பதன் மூலம் அவர்களுக்கான வாய்ப்புகளைப் புரிந்துகொண்டு, தன்னம்பிக்கை பெறுவதற்கும் இந்தப் பயிற்சி வகுப்பு உறுதுணையாக உள்ளது.**

...சாதனை தொடரும்

## 'நீட்' என்கிற சமமற்ற வாய்ப்பு - உணரட்டும் ஒன்றியம்!

'நீட்' என்பது சமமற்ற வாய்ப்பு. 'நீட்' என்பது அநீதி. ஏழைகள், கிராமப்புற மக்களுக்கு எதிரானது. சமச்சீரான கல்விமுறையை சீரழித்துவிடும். எனவே, நீட் ரத்து செய்யப்பட வேண்டும் எனத் தமிழ்நாடு போராடி வருகிறது. இந்திய அளவில், மாணவர்களின் மக்களின் குமுறலைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. அந்த வாதம் சரியானது என்று பல சான்றுகள் மூலம் நிரூபணம் ஆகி இருக்கிறது. இப்போது வெளிவந்துள்ள தகவல்கள்படி, தகுதித் தேர்வுகளை நடத்துவதில் சீர்திருத்தம் செய்யலாமா எனத் தேர்வு முகமை ஆலோசித்து வருவதாக, செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக, மூத்த பத்திரிகையாளர் மு.குணசேகரன் முகநூலில் தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார்.


"நீட் தேர்வு பள்ளிகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து, கோச்சிங் நிறுவனங்களின் வணிக வேட்டைக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்தது தமிழ்நாடு! dummy schools அதிகரித்துவிட்டன; நாள்தோறும் 6 மணி நேரம் கோச்சிங் மையங்களில் மாணவர்கள் வதைபடுகிறார்கள் என்ற அவலம் டெல்லியை, இப்போதுதான் உறுத்தத் தொடங்கி இருக்கிறது. ப்ளஸ்-ஒன் படிக்கும்போதே நீட்டை நடத்திவிடலாமா? கோச்சிங் மையத்தில் 3 மணி நேரத்துக்கு மேல் இருக்கக் கூடாது என உத்தரவு போடலாமா? பெயரளவுக்கு பள்ளிகளில் (dummy schools) அட்டன்டன்ஸ் போட்டுவிட்டு, முழுநேரமும் கோச்சிங் சென்டரில் இருப்பதைத் தடுப்பது எப்படி? பழையபடி ப்ளஸ்-டூ மதிப்பெண்ணுக்கு மதிப்பு தரலாமா? என்றெல்லாம் வல்லுநர் குழுவை அமைத்து ஆலோசனை கேட்கத் தொடங்கி இருக்கிறது ஒன்றிய அரசு.

'நீட்' என்பது சமமற்ற வாய்ப்பு. கோச்சிங் மையங்களில் லட்சக்கணக்கில் செலவழிக்கும் வசதியானவர்களுக்கு சாதகமானது. பள்ளிகளின் போதனை; ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை ஒன்றுமில்லாமல் செய்து, கல்விமுறையை சீரழித்துவிடும் என்ற தமிழ்நாட்டின் வாதம் சரியானது என்று மீண்டும் ஒரு முறை நிரூபணம் ஆகி இருக்கிறது. கோச்சிங் நேரக் கட்டுப்பாடு நடைமுறை சாத்தியமானதா? ப்ளஸ்-ஒன் படிக்கும்போதே நீட் தேர்வு நடத்துவது சுமையைக் குறைக்கும் செயலா?

ப்ளஸ்-டூ மதிப்பெண் போதும்; நீட் விலக்கு தாருங்கள் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை இப்போதாவது ஏற்பார்களா? நீட் ஒரு சர்வரோக நிவாரணி; அருமருந்து என்று தொடர்ந்து பிடிவாதம் காண்பிக்கப் போகிறார்களா?" எனக் கேள்வி எழுப்பி இருக்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்





இரா.எத்திராஜன்

### வெற்றிக் கோப்பையுடன் தலைவரை சந்தித்தேன்!

2001-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 'சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா' அகில இந்திய அளவில் நடத்திய, டேபிள் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில், நான் சாதனை படைத்தேன். அதற்கான வெற்றிக் கோப்பையுடன் அண்ணா அறிவாலயம் வந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றேன். தலைவரிடம் வாழ்த்து பெற்ற நாளை, என் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

**– இரா.எத்திராஜன்,**
**டேபிள் டென்னிஸ் பயிற்சியாளர்,**
**சைதாப்பேட்டை, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### தூத்துக்குடிப் போராட்டம்!

1953-ஆம் ஆண்டு ஜூலை மும்முனைப் போராட்டத்தின்போது, தூத்துக்குடியில் முதல் நாள் இரவே, கே.வி.கே.சாமி, செல்லசாமி, ரத்தினம் முதலான முன்னோடி கள் கைது செய்யப்பட்டனர். மறுநாள் ரயில் மறியல் செய்த எம்.எஸ்.சிவசாமி, நடராசன் உள்ளிட்டோர் கைது செய்யப் பட்டனர். தடியடி, துப்பாக்கிச்சூட்டில் நான்கு பேர் உயிரிழந்தனர். ரயில் நிலையம் அருகே இருந்த பாலம் சேதமடைந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131